■ சிறப்பு செய்தி

# எண்ணூரில் ₹3,960 கோடியிலான புதிய அனல்மின் நிலைய விரிவாக்க திட்டம் தோல்வியால் ₹4,442.75 கோடி இழப்பு

2011-21 அதிமுக ஆட்சியில் நிர்வாக கோளாறு

மின்வாரியம் நஷ்டத்தில் இயங்குவதற்கு காரணம்



சென்னை எண்ணூரில் சுமார் 238 ஏக்கர் பரப்பளவில் 1970ம் ஆண்டு முதல் 5 அலகுகள் மூலம் 450 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் வகையில் செயல்பட்டு வந்த எண்ணூர் அனல்மின் நிலையம் பல்வேறு காரணங்களால் அடிக்கடி பழுதானது. மின்வாரியம் சார்பில் பல கோடி ரூபாய் செலவு செய்தும் இதை முழுமையாக சரி செய்ய முடியவில்லை. இதனால், கடந்த 2017ம் ஆண்டு இந்த அனல் மின்நிலையம் நிரந்தரமாக மூடப்பட்டது. இதனிடையே, சென்னையின் மின் தேவையை பூர்த்தி செய்ய எண்ணூரில் புதிய அனல் மின்நிலைய விரிவாக்க திட்டம் கொண்டுவர கடந்த 2009ம் ஆண்டு திமுக ஆட்சியின்போது திட்டமிடப்பட்டது. இதையடுத்து, சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு அனல் மின்நிலைய வளாகத்தில் 7 இடங்களில் மண் பரிசோதனை மற்றும் நீர்வள பரிசோதனை செய்யப்பட்டது.

இந்த அனல் மின்நிலையம் அமைய உள்ள இடம் எண்ணூர் கழிமுகம் கொசஸ்தலை ஆறு மற்றும் வங்காள விரிகுடா மத்தியில் உள்ளதால் சுற்றுச்சூழல் முக்கியத்துவம் இடமாக கருதப்பட்டது. இதனால் பல்வேறு பாதுகாப்பு அம்சங்களை குறிப்பிட்டு 2018ம் ஆண்டுக்குள் புதிய அனல் மின்நிலையம் செயல்பாட்டுக்கு வர வேண்டுமென்று நிபந்தனையுடன் ஒன்றிய சுற்றுச்சூழல் துறை அனுமதி வழங்கியது.

அதன்படி, 238 ஏக்கர் நிலத்தில் 110 ஏக்கர் நிலத்தை புதிய அனல் மின்நிலைய திட்டத்திற்கு பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டு ₹3960 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சிறப்பு திட்டம் தயாரித்தது தொடர்ந்து, 26.10.2012 அன்று உலகளாவிய ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது. இதில் அனல் மின் நிலைய திட்ட செயல்பாட்டில் கைதேர்ந்த பல்வேறு நிறுவனங்கள் போட்டியிட்டன. முடிவில் ஐதராபாத்தைச் சேர்ந்த லான்கோ இன்ஃப்ராடெக் லிமிடெட் என்ற தனியார் நிறுவனம் ஒப்பந்தத்தை எடுத்தது.

இதையடுத்து இந்த அனல் மின்நிலைய திட்டத்திற்கு அப்போதைய முதல்வர் மறைந்த ஜெயலலிதா அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார். இதன்படி அதிக மின் திறன், நவீன தொழில்நுட்பம் அடிப்படையில் ஒரே அலகில் 660 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய அதிநவீன மின்னலையை அமைக்கும் வகையில் பணிகள் தொடங்கின. ஆனால், பல்வேறு காரணங்களால் அடுத்த இரண்டாவது ஆண்டில் இந்த கட்டுமான பணிகளில் தொய்வு ஏற்பட்டது. ஒப்பந்தம் எடுத்த நிறுவனத்திற்கு ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணம் என அப்போது தெரிவிக்கப்பட்டது. இதனால் அனல் மின் நிலைய விரிவாக்கத்தின் துணை ஒப்பந்ததாரர்களுக்கு பணம் வழங்குவது காலதாமதனதால் இங்கு பணியாற்றிய ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் ஊழியர்கள் படிப்படியாக எண்ணூர் அனல் நிலைய விரிவாக்க பணியில் இருந்து வெளியேறியதால் பணிகளை தொடர்வதில் சிக்கல் ஏற்பட்டது. கிடப்பில் போடப்பட்ட பணிகளை மீண்டும் தொடங்க மின்துறை அமைச்சர்களும், அதிகாரிகளும் ஒப்பந்தம் எடுத்த நிறுவனத்துடன் பல கட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் எந்த முன்னேற்றமும் இல்லை.

இதன் காரணமாக, 14.4.2018க்குள் முடிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்ட எண்ணூர் அனல்மின் நிலைய விரிவாக்க பணிகள் 17 சதவீதம் முடிந்த நிலையில் முற்றிலுமாக முடங்கியது. இவ்வாறு திட்டப்பணிகள் முடங்கியதற்கு அரசு தரப்பில் பல்வேறு காரணங்களை கூறினாலும், விரிவாக்க திட்டத்திற்காக ஒப்பந்தம் எடுத்த ஒப்பந்ததாரர் தகுதியானவர் அல்ல என்று எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தின.

இதை தொடர்ந்து, திட்டத்தை டெண்டர் எடுத்த லான்கோ இன்ஃப்ராடெக் லிமிடெட் ஒப்பந்தத்தை ரத்து செய்து அரசு அறிவிப்பாணை வெளியிட்டது. பின்னர் முடங்கிய பணியை தொடர்ந்து செயல்படுத்த கடந்த 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் மறு ஒப்பந்தம் கோரப்பட்டது. இதில் பங்கேற்ற ஒன்றிய அரசின் பெல் நிறுவனம் ₹4,957.11 கோடிக்கும், பிஜிஆர் எனர்ஜி சிஸ்டம்ஸ் என்கிற தனியார் நிறுவனம் ₹4,442.75 கோடிக்கும் டெண்டர் கோரிய நிலையில், குறைவான தொகை குறிப்பிட்டிருந்த பிஜிஆர் நிறுவனத்திற்கு டெண்டர் ஒதுக்கப்பட்டு. 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இந்த பணி உத்தரவு வழங்கிய தினத்திலிருந்து 36 மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது.

ஆனாலும், டெண்டர் எடுத்து மூன்று மாதங்கள் ஆகியும் பி.ஜி.ஆர் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனம் பல்வேறு காரணங்களால் பணியை துவங்கவில்லை. பணிகள் தொடர்பாக டெண்டர் எடுத்த நிறுவனத்திற்கும் மின்வாரத்துறை அதிகாரிகளுக்கும் இடையே ஆவண பரிமாற்றம் நடத்தப்பட்டதே தவிர, அனல் மின் நிலையத்திட்ட பணி தொடரவில்லை. இதனால் இரண்டாவது முறையாக எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பின.

இந்நிலையில் டெண்டர் தொகையில் 10 சதவீதத்தை வங்கி உத்தரவாதமாக 30 நாட்களில் முழுமையாக செலுத்த வேண்டுமென்ற டெண்டர் நிபந்தனைப்படி, உத்தரவாத தொகையை 16 மாதங்களாககியும் செலுத்தவில்லை என குற்றம் சாட்டி பி.ஜி.ஆர் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவை ரத்து செய்து 2021 ஏப்ரல் 23ம் தேதி மின் பகிர்மான கழகம் உத்தரவிட்டது. பி.ஜி.ஆர் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் ஆரம்ப வைப்பு தொகையையும் திருப்பி வழங்க மறுத்தது. ஆனால் தங்கள் மீது எந்த தவறும் இல்லை என மின்துறை அதிகாரிகளிடம் வாதிட்ட பி.ஜி.ஆர் நிர்வாகம் இதை எதிர்த்து நீதிமன்றத்தை நாடியுள்ளது.

மேலும், பழைய எண்ணூர் அனல் மின்நிலையத்தின் 5 அலகுகளை பராமரிக்க 2011ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டு வரை அதிமுக ஆட்சியில் பராமரிப்பு செலவு என்ற பெயரில் பல கோடி ரூபாய் வீணடிக்கப்பட்டதோடு ஆண்டுதோறும் பல கோடி ரூபாய் சி.எஸ்.ஆர். நிதி பொதுமக்களுக்கு செலவிடப்பட்டதாக கூறியுள்ளனர். இதில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், புதிய எண்ணூர் அனல் மின்நிலைய விரிவாக்க திட்டம் செயல்படாமல் போனதற்கு அப்போதைய அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளே காரணம் என குற்றம்சாட்டி, இதன் மூலம் அரசுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் ₹2600 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது. இந்த இரு பிரச்னை தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் 2013-15ம் ஆண்டுகளில் மின்தேவை சராசரியாக 12,500 மெகாவாட் என கணக்கிடப்பட்டது. அனல், புனல் மற்றும் காற்றாலை என மின்சார உற்பத்திக்கு பல வழிகள் இருந்தாலும், தனியாரிடம் கொள்முதல் செய்வதிலேயே அதிமுக அரசு கவனம் செலுத்தியது. இதற்காக 2013ம் ஆண்டு 3,300 மெகாவாட் அளவுக்கு மின் கொள்முதல் செய்ய 11 தனியார் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் முழுக்க முழுக்க கொள்முதல் விதிகளை மீறியது. அதுமட்டுமின்றி சந்தை விலையை விட மிக அதிக விலை கொடுத்து இந்த நிறுவனங்களிடம் மின்சாரம் வாங்கப்படுகிறது. இந்த நிறுவனங்களில் 8 நிறுவனங்கள் வெளி மாநிலங்களை சேர்ந்தவை.

இதன் மூலம் அப்போதைய முதல்வர் ஜெயலலிதா மற்றும் அமைச்சருக்கு பெருந்தொகை கமிஷனாக சென்று கொண்டிருந்ததாகவும், இவ்வாறு தனியார் நிறுவனங்களிடமிருந்து மின்சாரம் வாங்குவது தடைபடாமல் இருக்கவே புதிய எண்ணூர் அனல் மின் நிலையம் மட்டுமின்றி தமிழகத்தில் பல மின்திட்டங்களை செயல்படுத்துவதில் அதிமுக அரசு சுணக்கம் காட்டியதாகவும், தனியாரிடமிருந்து மின்சாரத்தை வாங்குவதால் சுமார் 40 ஆயிரத்து 327 கோடி இழப்பு ஏற்படும் என அப்போதைய காலகட்டத்தில் பொறியாளர் அமைப்பினர் அரசை எச்சரித்தும் பயனில்லை. அதிமுக ஆட்சியில் ஏற்பட்ட நிர்வாக கோளாறும், ஊழலும் தான் இன்றுவரை மின்வாரியம் மீள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

## நிதி நெருக்கடியில் தவித்த நிறுவனத்திற்கு டெண்டர்

புதிய அனல் மின் நிலைய திட்ட விரிவாக்கத்திற்கு அனுபவமிக்க எல்இடி, ரிலையன்ஸ், பெல் போன்ற நிறுவனங்களும் பிரசித்தி பெற்ற சீன நிறுவனங்களும் போட்டியிட்டன. ஆனால், மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு உதவிகரமாக இருந்த அப்போதைய தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ராம்மோகன்ராவ் தலையீட்டின் காரணமாக அவருக்கு நெருக்கமான ஐதராபாத்தைச் சேர்ந்த லான்கோ இன்ஃப்ராடெக் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதாகவும், அரசு நிறுவனங்கள் டெண்டர் எடுத்தால் கமிஷன் கிடைக்காது, என்பதற்காக அதிகமான கமிஷன் வழங்க வேண்டும் என்ற எழுதப்படாத உத்தரவாதத்தின் அடிப்படையில் லான்கோ இன்ஃப்ராடெக் நிறுவனத்திற்கு டெண்டர் கொடுக்கப்பட்டதாகவும், ஏற்கனவே வங்கிகளில் ₹47 கோடி ரூபாய் கடன் பெற்று அதை திரும்ப செலுத்த முடியாமல் நிதி நெருக்கடியில் இருந்த இந்த நிறுவனத்திற்கு டெண்டர் கொடுக்கப்பட்டது உள்நோக்கம் கொண்டது என சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டினர்.

## தேசிய பசுமை தீர்ப்பாயம் அனுமதி மறுப்பு

எண்ணூர் அனல் மின்நிலைய விரிவாக திட்டம் தொடங்கப்பட்டபோது தேசிய பசுமை தீர்ப்பாயம் வழங்கிய தடையில்லா சான்று 10 ஆண்டுகளுக்கு மட்டுமே நடைமுறையில் இருக்கும். அதற்குள் பணிகள் முடிக்கப்படவில்லை என்றால் மீண்டும் தடையில்லா சான்று பெற வேண்டும். இதன்படி மறு ஒப்பந்தம் கோரப்பட்டபோது தடையில்லா சான்று வழங்க தேசிய பசுமை தீர்ப்பாயம் மறுப்பு தெரிவித்துள்ளது. இதற்கு காரணம், புதிய எண்ணூர் அனல் மின் நிலைய திட்டம் நடைபெறும் இடத்திற்கு சுமார் 100 மீட்டர் தூரத்தில் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் சுமார் 6,877 குடியிருப்பு கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இந்த திட்டம் செயல்படுத்தினால் குடியிருப்புகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதை காரணம் காட்டி தேசிய பசுமை தீர்ப்பாயம் தடையில்லா சான்று வழங்க மறுப்பு தெரிவித்து விட்டது. தடையில்லா சான்று பெறுவதில் சிக்கல் ஏற்படும் என்ற புரிதல் இல்லாமல் மின்வாரிய பகிர்மான அதிகாரிகள் மறு டெண்டர் விட்டார்களா அல்லது எதிர்கட்சிகளில் வாயை அடைக்க தெரிந்தே மறு டெண்டர் விட்டார்களா என்ற கேள்வியும் எழுந்தது.

CSIR - மத்திய உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிறுவனம்
கிஜுபாய் பதேகா மார்க், பாவ்நகர் - 364 002
(CSIR - அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் ஒரு தன்னாட்சி அமைப்பு)

விளம்பரம் எண். 1/2024

CSIR–மத்திய உப்பு மற்றும் கடல் இரசாயன ஆராய்ச்சி நிறுவனம், பாவ்நகர் தகுதியான இந்திய குடிமக்களிடமிருந்து **ஆன்லைன்** விண்ணப்பங்களை வரவேற்கிறது. ஊதிய நிலை–2 இல் 01 இளநிலை செயலக உதவியாளர் (ஸ்டோர் & பர்சேஸ்) [SC க்கு ஒதுக்கப்பட்டுள்ளது] மற்றும் ஊதிய நிலை–4 இல் 02 இளநிலை ஸ்டெனோகிராஃபர் பதவிகள் [01 பதவி OBC மற்றும் 01 EWS க்கு ஒதுக்கப்பட்டுள்ளது] .

முழுமையான விவரங்களுக்கு, நிறுவனத்தின் இணையதளமான www.csmcri.res.in/jobs ஐ பார்க்கவும்

ஒம்/-
CBC 36212/12/0001/2425 நிர்வாக கட்டுப்பாட்டாளர்

தமிழ்நாடு அரசு
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்களால் செட்டிக்குளம் மேம்பாடு செய்தல் பணிக்கு (இரண்டு உறைமுறை) ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 05.12.2024 முதல் 19.12.2024 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்:
(i) மின் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 19.12.2024, பி.ப. 3.00 மணி வரை
(ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 19.12.2024, பி.ப. 4.00 மணி முதல்

கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி),
செ.ம.தொ.இ.5301/ஒப்பந்தப்புள்ளி/2024 மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை.

இந்து சமய அறநிலையத்துறை
அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில்,
ஆனைமலை நகர் மற்றும் வட்டம், கோவை மாவட்டம்
இணையவழி – ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:128/2024 நாள்: 02.12.2024
ஒப்பந்த வகை : LUMPSUM

அருள்மிகு மாசாணியம்மன் திருக்கோயில், ஆனைமலை நகர் உதவி ஆணையர்/செயல் அலுவலர் அவர்கள் திருக்கோயிலின் கீழ்க்காணும் பணிக்கு தமிழ்நாடு அரசுத்துறைகளில் பதிவுபெற்ற நடப்பில் உள்ள, தகுதிவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து, தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளம் (https://tntenders.gov.in) மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ரூ. | முன் வைப்புத் தொகை ரூ. | பணி முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1 | திருக்கோயில் இடத்தில் பணியாளர்களுக்கு குடியிருப்பு கட்டும் பணி | ரூ.5,98,00,000/- | ரூ.3,09,000/- | 18 மாதங்கள் |

1. இணைய வழியில் அலுவலக வேலைநாட்களில் இலவசமாக ஒப்பந்தப் புள்ளிகளை தரவிறக்கம் செய்ய : 06.12.2024 முதல் 08.01.2025 5.00 மணி வரை
2. இணைய வழியில் ஒப்பந்தப் புள்ளிகளை தரவேற்றம் செய்ய : 09.01.2025 பிற்பகல் 03.00 மணி வரை
3. இணைய வழியில் ஒப்பந்தப் புள்ளிகளை திறக்கும் நாள் மற்றும் நேரம் : 09.01.2025 பிற்பகல் 03.30 மணி

முக்கிய விவரங்கள், ஒப்பந்தப்புள்ளி ஆவணம் மற்றும் திருத்திய விவரங்கள் (https://tntenders.gov.in)-ல் மட்டுமே பெறப்படும். செய்தித்தாளில் வெளியிடப்படாது.

(ஒம்) உ.ச.கைலாசமூர்த்தி
செ.ம.தொ.இ.5292/ஒப்பந்தப்புள்ளி/2024 உதவி ஆணையர்/செயல் அலுவலர்

பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க வேண்டும்

## ஆட்சியாளர்களை குறைகூறி அரசியல் செய்ய வேண்டாம்

தவெக தலைவர் விஜய் வேண்டுகோள்

**சென்னை, டிச.4:** தவெக தலைவரும், நடிகருமான விஜய் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

புயல் எப்போதும் பேரிடரையும், பெரும் பாதிப்பையும் மக்களுக்கு உண்டாக்கும் ஒரு இயற்கை சீற்றமே. மக்கள் துன்புறும் வேளையில், ஆட்சியாளர்களை குறிவைத்து குறைகூறி மட்டுமே அரசியல் செய்யும் கலாச்சாரத்தை நாம் பின்பற்றப் போவதில்லை என்ற தீர்க்கமான முடிவை எடுத்திருக்கிறோம். பல மாவட்டங்களில் வெள்ள நீர் வடியவில்லை. இன்னமும் இயல்பு நிலைக்கு திரும்பவில்லை. இந்த சூழ்நிலையில், மேலும் சில மாவட்டங்களில் கனமழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தினந்தோறும் எச்சரிக்கை விடுத்து வருகிறது. எனவே, நம் தோழர்கள், தங்களின் பாதுகாப்பை முழுமையாக உறுதி செய்துகொண்ட பிறகே பேரிடர் பணிகள் மற்றும் உதவிகளை செய்ய வேண்டும். வெள்ளநீர் முழுவதுமாக வடியும் வரை, பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க வேண்டும். மக்களோடு மக்களாக கரம் கோத்து நிவாரண பணிகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இளம்பெண்ணுடன் இருந்தபோது

## மாஜி காதலனை வீட்டோடு எரித்து கொன்ற நடிகையின் தங்கை கைது



▶ ஆலியா ஃபக்ரி

**நியூயார்க், டிச.4:** பாலிவுட் நடிகை நர்கிஸ் ஃபக்ரியின் தங்கை ஆலியா ஃபக்ரி தன் முன்னாள் காதலர் மற்றும் அவரின் காதலியை கொலை செய்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தி படங்களில் நடித்து வருபவர் அமெரிக்காவில் வசிக்கும் காஷ்மீர் பெண் நர்கிஸ் ஃபக்ரி. 2011ல் வெளியான 'ராக்ஸ்டார்' படத்தில் ரன்பிர் கபூர் ஜோடியாக நடித்து பாலிவுட்டில் அறிமுகமானார். இவரது தங்கை ஆலியா ஃபக்ரி (43). நியூயார்க்கில் வசிக்கும் இவர் எட்வர்ட் ஜேக்கப்ஸ் (35) என்பவரை காதலித்துள்ளார். ஆனால் காதல் முறிந்து விட்டது. இதையடுத்து அனஸ்தேசியா எட்டியன் (33) என்கிற பெண்ணை காதலித்து வந்தார் எட்வர்ட் ஜேக்கப்ஸ். இந்நிலையில் சமீபத்தில் எட்வர்ட் ஜேக்கப்ஸ் மற்றும் அனஸ்தேசியா இருந்த கட்டிடத்தில் திடீரென நள்ளிரவில் தீப்பிடித்தது. தீயில் கருகி, எட்வர்ட் ஜேக்கப், அனஸ் தேசியா பலியானார்கள்.

இதுதொடர்பாக போலீசார் விசாரித்ததில் எட்வர்ட் ஜேக்கப்பின் வீட்டுக்கு வெளியில் இருந்த கேமராவில் ஒரு பெண் பெட்ரோல் கேனுடன் செல்வது தெரிய வந்தது. விசாரணையில் அவர் ஆலியா ஃபக்ரி என தெரிந்தது. இதையடுத்து அவரை பிடித்து போலீஸ் விசாரித்ததில், வீட்டுக்கு தீ வைத்ததை ஒப்புக்கொண்டார். எட்வர்ட் ஜேக்கப் தனக்கு துரோகம் செய்ததால் இதை செய்ததாக கூறினார். இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.



▶ நர்கிஸ் ஃபக்ரி

சமூகநீதி, சமதர்ம, சகோதரத்துவ இந்தியாவை உருவாக்க

## நாம் அனைவரும் இணைந்து போராட வேண்டும்




▶ டெல்லியில் நேற்று நடந்த அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் மூன்றாவது தேசிய இணைய மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின், முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்துகொண்டு உரையாற்றினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

**சென்னை, டிச.4:** தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக டெல்லியில் நடைபெற்ற அகில இந்திய சமூகநீதி கூட்டமைப்பின் மூன்றாவது தேசிய இணைய மாநாட்டில் பேசியதாவது:

சமூகநீதி மாநாட்டைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் மாநிலங்களவை உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான வில்சனுக்கு பாராட்டுக்கள். மாநாட்டில் கலந்துகொண்டுள்ள அகில இந்திய தலைவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றி. தமிழ்நாட்டு மக்களுக்கு சமூகநீதி வழங்கியதோடு, இந்தியாவின் மற்ற மாநில ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், அத்தகைய உரிமை கிடைக்க வழிகாட்டியதும் திராவிட இயக்கம் தான்.

கடந்த 10 ஆண்டு காலத்தில் ஒன்றிய அரசின் துறைகளில், பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காடு ஒதுக்கீடு முழுமையாக வழங்கப்படவில்லை. பாஜ பெண்களுக்கும் விரோதமான கட்சிதான். அதனால்தான், பெண்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கும் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார்கள். 1929ம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த சுயமரியாதை மாநாட்டில்தான், பெண்களுக்குச் சொத்துரிமை, பணியுரிமை, மறுமணம் செய்துகொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு புரட்சிகரமான பெண்ணுரிமைத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன் தொடர்ச்சியாகத்தான், தி.மு.க. அரசில் பெண்களின் நலன் சார்ந்த பல்வேறு அடுக்கடுக்கான திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அவசியம். 2021ம் ஆண்டே எடுக்கப்பட்டிருக்க வேண்டிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை ஒன்றிய பா.ஜ அரசு உடனே தொடங்க வேண்டும். அதோடு இணைத்து சாதிவாரி கணக்கெடுப்பையும் நடத்தவேண்டும்.

சமூக நீதி, மதசார்பற்ற அரசியல், சமதர்மம், சமத்துவம், மாநில சுயாட்சி, கூட்டாட்சிக் கருத்தியல் இவை உயிர்வாழும் இந்தியாவே, இணையற்ற இந்தியா எனவே, இத்தகைய கருத்தியல்களை நாம் ஒன்று சேர்ந்து முன்னெடுக்க வேண்டும். சமூகநீதி இந்தியாவை உருவாக்க சமதர்ம இந்தியாவை உருவாக்க சகோதரத்துவ இந்தியாவை உருவாக்க நாம் அனைவரும் இணைந்து போராட வேண்டும்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

இதில், அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கான கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி ஈஸ்வரய்யா, அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பி.வில்சன் எம்பி, ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், பீகார் முன்னாள் துணை முதல்வர் தேஜஸ்வி யாதவ், இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் டி. ராஜா, சமாஜ்வாதி கட்சித் தலைவரும் உத்திர பிரதேச மாநில முன்னாள் முதல்வருமான அகிலேஷ் யாதவ், ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பரூக் அப்துல்லா, திக தலைவர் கி. வீரமணி, எம்பிக்கள் கனிமொழி, ஆ. ராசா, திருச்சி சிவா, வைகோ, திருமாவளவன், எம்எல்ஏக்கள் ஜவஹிருல்லா, ஈஸ்வரன், பல்வேறு கட்சியினர் கலந்து கொண்டனர்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்.
CIN: U67100TZ2014PTC020363
கார்ப்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47வது தளம், என்.சி. கேல்கர் சாலை, ஆர்.ஜி. கட்கரி சௌக், தாதர் (W) மும்பை 400 028.
மின்னஞ்சல்: karthi.govindasamy@omkaraarc.com | தொலைபேசி: 044-24323033
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மொபைல் எண்: +91 9344684194 / +91 9884062068

[பிற்சேர்க்கை - IV-A]
[விதி 8 (6)r/w 9(1) விதியைப் காண்க
அசையாச் சொத்தின் மின்-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

[illegible]

நிர்ணயிக்கப்பட்ட விலை: ரூ.35,00,000/-
முன்வைப்புத் தொகை: ரூ.3,50,000/-
ஏல உயர்த்தும் தொகை: ரூ.25,000/-

[illegible]

நாள்:04.12.2024
இடம்: சென்னை

கார்த்தி கோவிந்தசாமி
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
மொபைல் எண்: 9344684194
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்.